| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர் சி.உஷாராணி, M.Sc.,B.Ed., P.hd,<br>அரசுத் தேர்வுகள் இயக்கக இயக்குநர்<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை–6 | அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்/<br>இணை இயக்குநர் (கல்வி),<br>பாண்டிச்சேரி. |

**ந.க.எண்.124817/பி2/2019** **நாள் : 13.03.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– இடைநிலைக் கல்வி விடுப்பு சான்றிதழ் பொதுத்தேர்வு மார்ச் 2020 முகப்புத்தாட்கள் – பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தனித்தேர்வர்களின் விடுபட்ட / பார்கோடு இல்லாத / சேதமடைந்த முகப்புத்தாட்களை மஞ்சள் நிறத் தாளில் மறுஅச்சமுத்தம் செய்தல் – சார்பு

**பார்வை :** இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம்,
நாள்: 11.03.2020

******

மார்ச் 2020, இடைநிலைக் கல்வி விடுப்பு சான்றிதழ் பொதுத்தேர்விற்கான முகப்புத் தாட்கள் அனைத்து தேர்வுமைய தலைமையாசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு முகப்புத்தாட்களை முதன்மை விடைத்தாட்களுடன் இணைத்து தைக்கும் பணியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. அம்முகப்புத்தாட்களில் விடுபட்ட, பெறப்படாத, சேதமடைந்த முகப்புத்தாட்களை பதிவிறக்கம் செய்தல் சார்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து பார்வையில் காண் கடிதம் வாயிலாக அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

அவற்றுள் விடுபட்ட தனித்தேர்வர்களுக்கான முகப்புத்தாட்களை பதிவிறக்கம் செய்து மறுஅச்சமுத்தம் (REPRINT) செய்யும் போது பழைய பாடத்திட்டத்தில் (old syllabus) தேர்வெழுதும் தனித்தேர்வர்களின் முகப்புத்தாட்களை கவனமாக மஞ்சள் நிறத் தாளில் (yellow colour) எடுத்து வழங்குமாறு சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எவ்வித காரணம் கொண்டும் colour topsheet-ஐ வெள்ளை நிறத்தாளில் பதிவிறக்கம் செய்திடல் கூடாது எனத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/-**
**இயக்குநர்**

**நகல்**

அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
– உரிய நடவடிக்கைக்காக